# பாரதிதாசன் பல்கலைக்கழகம்,

**(Re-accredited with “A” Grade by NAAC)**

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.

**முனைவர். க.துரையரசன்.** எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில். பி.ஹெச்.டி.
தேர்வு நெறியாளர்

தொலைபேசி: 0431- 2407016, 2407060
தொலைஅச்சு: 0431 – 2407444
மின்னஞ்சல் : coe@bdu.ac.in
இணையதளம்: www.bdu.ac.in


---

கடித எண். தேர்வுப்பிரிவு /**PG exams –November** 2018 **தேதி: 29.08.2018**

பெறுநர்

முதல்வர்
இணைவு பெற்ற தன்னாட்சி அல்லாத அனைத்துக் கல்லூரிகள்

அய்யா/அம்மையீர்

பொருள்: நவம்பர் 2018-ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக முதுநிலை பட்டமேற்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகள் – தேர்வுகளுக்கு விண்ண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் தேர்வு துவங்கும் நாள் - தெரிவித்தல் – தொடாபாக.

----

நடைபெறவிருக்கும் நவம்பர் 2018 பல்கலைக்கழக பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு தேர்வுகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் தேர்வு கட்டணத்துடன் பெறுவதற்குரிய கடைசி நாள் எழுத்துத் தேர்வுகள் செய்முறைத் தேர்வுகள் துவங்கும் நாள் ஆகியவை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது. **(except MBA & MCA)**

<u>பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் பெறுவதற்குரிய கடைசி நாள்:</u>

| | | |
|---|---|---|
| தண்டத் தொகையின்றி | : | 24.09.2018 (திங்கட்கிழமை) |
| தண்டத் தொகையுடன் | : | 03.10.2018 (புதன்கிழமை) |
| பட்டமேற்படிப்பு எழுத்துத் தேர்வுகள் துவங்கும் நாள் | : | 14.11.2018 (புதன்கிழமை) |
| பட்டயபடிப்பு எழுத்துத் தேர்வுகள் துவங்கும் நாள் | : | 03.12.2018 (திங்கட்கிழமை) |
| செய்முறைத்தேர்வுகள் நடைபெறும் தேதிகள் **( MSW –Field Work)** | : | 08.10.2018 **to** 17.10.2018 |

மேற்கண்ட தகவல்களை மாணவ மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கும் வண்ணம் கல்லூரி, அறிவிப்புப் பலகையில் வெளியிடுமாறும், தேர்வினை நல்ல முறையில் நடத்திட ஒத்துழைப்பு அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

90 நாட்கள் கல்லூரி, இயங்கியதற்குரிய சான்றிதழைத் தேர்வு துவங்குவதற்கு பத்து நாட்கள் முன்னதாகப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முதுநிலைப் பாடப்பிரிவுகளுக்கான தேர்வு விண்ணப்பங்களைத் பாடவாரியாக **(M.A.,M.SC.,M.Com.,MSW & All PG Diploma Courses)** தனித்தனியாக இணைப்புக் கடிதங்களுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இணையதளம் வழியாக செலுத்தப்பட்ட E- ரசீதுடன் தேர்வு கட்டண சுருக்கப்பட்டியல் **(Abstract for Examination fee-downloadable from University Website)** கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு தேர்வு கட்டண சுருக்கப் பட்டியல் இல்லாத நு- ரசீதுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மீளப்பயிலுதல் **(Re-do)** மறு சேர்க்கை **(Re-admission)** மற்றும் மாற்றுச் சேர்க்கை **(Transfer admission)** என்பது தேர்வு கட்டண சுருக்கப்பட்டியலில் தெளிவாக குறிப்பிட வேண்டும். மேற்கண்ட சேர்க்கைகளுக்காகப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் நகலை இணைத்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி <u>05.10.2018. (வெள்ளிக்கிழமை)</u> க்குப் பின்னர் வரும் அனைத்து தேர்வு விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இக்கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

தேர்வு நெறியாளர்

# பாரதிதாசன் பல்கலைக்கழகம்,

**(Re-accredited with "A" Grade by NAAC)**

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.

**முனைவர். க.துரையரசன்.** எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில். பி.ஹெச்.டி.
தேர்வு நெறியாளர்

தொலைபேசி: 0431- 2407016, 2407060
தொலைஅச்சு: 0431 – 2407444
மின்னஞ்சல் : coe@bdu.ac.in
இணையதளம்: www.bdu.ac.in


---

கடித எண்.**COE/P.G.Practical/ November** 2018 தேதி: 29.08.2018

பெறுநர்

முதல்வர்
இணைவு பெற்ற தன்னாட்சி அல்லாத அனைத்துக் கல்லூரிகள்

அய்யா/அம்மையீர்

பொருள்: நவம்பர் 2018-ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக முதுநிலை பட்டமேற்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகள் – செய்முறைத் தேர்வு, களப்பணி தேர்வுகள், துவங்கும் நாள் - தெரிவித்தல் – தொடர்பாக.

----

நவம்பர் 2018-ல் நடைபெறவிருக்கும் பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு பாடங்களுக்கான செய்முறைத் தேர்வுகள் மற்றும் களப்பணி தேர்வுகளுக்கான கால அட்டவணை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது. ( **MBA & MCA** நீங்கலாக)

முதுநிலை செய்முறைத் தேர்வுகளுக்கான **(Practical exams for M.Sc., all PG Diploma Courses & MSW – Field Work )** தேர்வுகள் 08.10.2018 முதல் ஆரம்பித்து 17.10.2018- க்குள் நடத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதனை தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் சம்பந்தப்பட்ட துறைப்பேராசிரியர்களுக்கும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

செய்முறைத் தேர்விற்கான மாதிரி கால அட்டவணையைத் தயார் செய்து 17.09.2018-க்குள் இரண்டு நகல்கள் எடுத்து இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி **ஒப்புதல் பெற்ற பிறகே** செய்முறைத் தேர்வுகளை நடத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்துக் மாணவர்களின் அகமதிப்பெண்கள், செய்முறைத் தேர்வு மதிப்பெண்கள் மற்றும் களப்பணித் தேர்விற்கான மதிப்பெண்கள் ஆகியவைகளை **25.10.2018** தேதிக்குள் இணையதளத்தின் வாயிலாகவும் (www.bdu.ac.in/exam-esubmit) மற்றும் அஞ்சல் வழியாகவும் தேர்வு நெறியாளருக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உடன் மதிப்பெண்களை அனுப்பி வைக்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**MSW களப்பணி தேர்வுகள் (முதல் மற்றும் மூன்றாம் பருவம்)**

| | |
|---|---|
| திருச்சி, கரூர், அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் | **08.10.2018** |
| புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் | **12.10.2018** |

இக்கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

தேர்வு நெறியாளர்